*கவனிக்க*.- 2015.10.02 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1936 - 2015 ඔක්තෝබර් මස 09 වැනි සිකුරාදා - 2015.10.09

*1936 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | 1322 |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1328 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# துணை விதிகள்

**தெரணியகல பிரதேச சபை**

துணை விதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாண சபையின் நிருவாக அதிகாரத்தின் கீழான தெரணியகல பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்ட, கீழே குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகள், பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பது இத்தால் அறியத்தரப்படுகிறது.*

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண சபை அலுவலகம்,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2015, ஒகத்து 07.

**தெரணியகல பிரதேச சபையின் பொது நூலகம் ஒழுங்குபடுத்தலும் நிருவகித்தலும் தொடர்பான துணை விதிகள்**

1. மேற்படி துணைவிதிகள் தெரணியகல பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்திற்குள் நடாத்தப்பட்டு வருகின்ற நூலகத்தினை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும், நிருவகித்தல் தொடர்பான துணை விதிகளுமாகும்.

2. தெரணியகல பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்திற்குள் வாழும் மக்களின் கல்வியை அபிவிருத்தி செய்தல், வாசிக்கும் ஆற்றலை விருத்திசெய்தல், தனிமனித ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்துதல், பொழுதுபோக்கு மற்றும் ஆக்கத்திறன் விருத்திக்கான பல்வேறு வளங்கள் சேவைகளை வழங்குதல் மூலம் பொதுநூலக சேவையினை ஒழுங்கமைத்து நிருவகிப்பதற்கு தெரணியகல பிரதேச சபையினால் மேற்படி துணை விதிகள் விதிக்கப்படுகின்றன.

3. தெரணியகல பிரதேச சபை நூலக அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்துக்குள் வாழும் மக்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு கீழே குறிப்பிடப்படும் அம்சங்களும் சேவைகளும் அடங்கும்:-

(i) இரவல் கொடுக்கும் பிரிவு
(ii) ஆய்வுப் பிரிவு
(iii) சிறுவர் பிரிவு
(iv) செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் பிரிவு
(v) கற்றல் பிரிவு
(vi) நூல்கள் பாதுகாத்தல் பிரிவு
(vii) அரிய நூல்கள் பிரிவு
(viii) விசேட சேகரிப்பும் பிரதேச சேகரிப்பும்
(ix) பொதுமக்கள் தகவற் பிரிவு
(x) ஒளிப்படப் பிரதி பிரிவு
(xi) கட்புல செவிப்புல தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு
(xii) பிரசாரப் பிரிவு

4. தெரணியகல பிரதேச சபையின் பொது நூலகத்துக்கு நூலகர் ஒருவர் இருத்தல் அவசியமாவதோடு அவ்வாறு நியமிக்கப்படுகின்றவர் பொது நூலகத்தினை ஒழுங்குபடுத்தல் நிருவகித்தல் ஆகியன முறைப்படி நடைமுறைப்படுத்தல் தொடர்பாக பிரதேச சபைக்கு பொறுப்பு கூறுபவராதல் வேண்டும்.

5. பொது நூலகத்தின் மேற்பார்வை மற்றும் பொது நிருவாகம் தொடர்பாக (இதன் பிரகாரம் இதன்பின்னர் நூலகக்குழு எனக் குறிப்பிடப்படும்) நூலக ஆலோசனைக் குழுவொன்றிடம் பொறுப்பளிக்கப்படும்.

(i) இச்செயற்குழு வருடாந்தம் பிரதேச சபையினால் நியமனம் செய்யப்படும். அதில் கீழே குறிப்பிடப்படுபவர்கள் அடங்குவார்கள்:-
(அ) பிரதேச சபையின் தவிசாளர்;
(ஆ) பிரதேச சபை அங்கத்தவர்களுள் தேர்ந்தெடுக்கப்படும் மூவருக்கு மேற்படாத உறுப்பினர்கள்;
(இ) பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வாழும் மக்கள் பின்பற்றுகின்ற மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒவ்வொரு மதத்தின் சார்பிலும் பிரதிநிதி ஒருவர்வீதம்;

(ஈ) பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வாழும் முக்கிய பிரமுகர்களில் பிரதேச சபையினால் தெரிவுசெய்யப்படும் மூவருக்கு மேற்படாத எண்ணிக்கையினர்;
(உ) பிரதேச சபையின் செயலாளர்;
(ஊ) பொதுசன அபிவிருத்தி அலுவலர்;
(எ) பிரதேச சபையின் பொதுநூலக நூலகர்;
(ஏ) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தின் பிரபல பாடசாலை அதிபர் ஒருவர்;
(ஐ) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தின் சனசமூக சபையொன்றின் பிரதிநிதி ஒருவர்.

(ii) பதவியின் அடிப்படையில் பிரதேச சபையின் கௌரவ தவிசாளரே குழுவின் தலைவராதல் வேண்டும். குழுவின் ஒவ்வொரு கூட்டத்தின்போதும் அவரே தலைமை வகித்தலும் வேண்டும். ஏதாவதொரு கூட்டத்தின்போது சபையின் தவிசாளர் சமுகந்தர இயலாதவிடத்து, சமுகந்தந்திருக்கும் குழு உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் குழு உறுப்பினர்களுள் ஒருவர் அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தல் வேண்டும்:

(iii) பிரதேச சபையின் செயலாளரே அழைப்பாளராதல் வேண்டும்;

(iv) பிரதேச சபையின் பிரதான நூலகரே குழுவின் செயலாளராதல் வேண்டும்;

(v) கூட்ட நடப்பெண் ஆனது அங்கத்தவர் எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்காக இருத்தல் வேண்டும்;

(vi) ஏதாவதொரு கூட்டத்தின்போது தலைமை தாங்கும் உறுப்பினருக்கு ஓர் அடிப்படை வாக்கும், ஏதாவதொரு பிரச்சினையின்போது ஆதரவாகவும் எதிராகவும் வாக்குகளின் எண்ணிக்கை சமமாக இருக்கும் பட்சத்தில் தீர்ப்பு வாக்கொன்றும் இருக்கும்.

6. **அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளல் :-**

(i) நூலக சேவையினை எதிர்பார்க்கும் ஒவ்வொருவரும் அங்கத்துவம் பெறுவதற்காக சபையினால் காலத்துக்குக் காலம் பிரேரணைகள்மூலம் விதிக்கப்படும் கட்டணத்தினைச் செலுத்தி நூலகப் பொறுப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பப் படிவத்தின்மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். அத்துடன் அவ்விணப்பத்தை இங்கு கீழே குறிப்பிடப்படும் ஒருவரைக் கொண்டு அத்தாட்சிப்படுத்திக் கொள்ளவும் வேண்டும்:-

(அ) வசிக்கும் பிரதேசத்தின் கிராம அலுவலர் ;
(ஆ) சமாதான நீதவான் ஒருவர் ;
(இ) பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர் ஒருவர் ;
(ஈ) அரச சேவையின் அல்லது மாகாண அரச சேவையின் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர்;
(உ) பாடசாலை விண்ணப்பதாரியாயின் அவ்விண்ணப்பதாரியின் வகுப்பாசிரியர் அல்லது பாடசாலை அதிபரின் சான்றிதழ்.

(ii) **நூலக அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளல் :-**

(அ) பொது அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஒருவர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்துக்குள் வாழ்பவராக அல்லது சொத்துரிமையுடையவராக இருத்தல்;
(ஆ) சிறுவர் அங்கத்துவத்தின் பொருட்டு ஐந்து வயதுக்கு மேற்பட்டவராக, பிரதேச பாடசாலை அல்லது பிரிவேனா ஒன்றிற் கற்பவராக இருத்தல்;
(இ) சிறுவர் நூலகத்தைப் பயன்படுத்துவதற்கு வயதெல்லை பொருந்தாது.

(iii) **அங்கத்துவக் கட்டணம்**:-

(அ) சாதாரண அங்கத்தவரொருவருக்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் 100 ரூபா ஆகும். வருடத்துக்கு ஒருமுறை 50 ரூபாவை செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்;
(ஆ) சிறுவர் அங்கத்தவர்களுக்கான அங்கத்துவக் கட்டணம் 50 ரூபா ஆகும். வருடத்துக்கு ஒரு முறை 25 ரூபா செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

(iv) **பிணையாளர்கள் :-**

(அ) சராசரி அங்கத்தவர் ஒருவருக்கான பிணையாளராக தெரணியகல பிரதேச சபைக்கு வரிப்பணம் செலுத்தும் நிரந்தரவதிவாளர் ஒருவர் கையொப்பமிட வேண்டும்;
(ஆ) சிறுவர் அங்கத்தவர் ஒருவருக்கான பிணையாளராக அவரது தாய்/தந்தை/பாதுகாவலர் கையொப்பமிட வேண்டும்.

7. இரவல் பெறும் அங்கத்தவர் ஒருவருக்கு இரண்டு அனுமதி அட்டைகள் வழங்கப்படுவதோடு, அங்கத்தவர் பெற்றுச்செல்லும் ஒவ்வொரு நூலுக்கும் அவரே பொறுப்புக்கூறல் வேண்டும்.

8. நூலக அங்கத்தவரால் இரவல் பெறப்பட்ட நூலொன்று, பெற்றுக்கொண்ட தினத்தில் இருந்து 14 நாட்களுக்குள் நூலகரிடம் மீள ஒப்படைக்கப்படல் வேண்டும்.

9. துணைவிதியின் 7 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி 14 நாட் கால எல்லைக்குள் ஏதாவதொரு நூலினை நூலகப் பொறுப்பாளரிடம் திருப்பி ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில் அந்நூலினைத் திருப்பி ஒப்படைக்கும் திகதியை மீறிச் செல்லும் ஒவ்வொரு தினத்துக்காகவும் பிந்திய கட்டணமாக 2 ரூபா வீதமும், 12 வயதுக்குக் குறைந்த அங்கத்தவர் ஒருவரின் பொருட்டு 1 ரூபா வீதமும் அல்லது குழுவின் சிபாரிசுகளின் பிரகாரம் சபையினால் காலத்துக்குக் காலம் பிரேரணைகள் அங்கீகரிக்கப்படுவதன் மூலம் தீர்மானிக்கப்படும் ஏதாவதொரு கட்டணத்தைச் செலுத்துவதற்கு உட்பட வேண்டும்.

10. துணைவிதியின் 8 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இரவல் பெறப்பட்ட நூலொன்று 14 நாட் காலஎல்லை கடந்து 7 நாட்களின் பின் அங்கத்தவருக்கு அறிவித்தற் கடிதம் ஒன்றும் பிணையாளிக்கு ஒரு தடவையும் அறியத்தரப்படுவதோடு அதனால் ஏற்படும் செலவுப் பணம் குறிப்பிட்ட அங்கத்தவரிடமிருந்தோ பிணையாளரிடமிருந்தோ அறவிடப்பட வேண்டும். அவ்வாறு அறிவித்தல் தரப்பட்ட பின்னரும் அந்நூலினைத் திருப்பி ஒப்படைக்கத் தவறும் சந்தர்ப்பத்தில் அந்நூலானது காணாமற் போன நூலாகக் கருதப்படும்.

11. அவ்வாறு காணாமற் போனதாகக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் அந்நூலின் பெறுமதியும், அதற்கு மேலதிகமாக 25% சேவைக்கட்டணமும், துணைவிதியின் 8 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தண்டப்பணமும் குறிப்பிட்ட அங்கத்தவராலோ பிணையாளியாலோ செலுத்தப்பட வேண்டும். அங்கத்தவரால் இரவல் பெறப்பட்ட நூலுக்கு சேதம் விளைவித்தல் அல்லது வேறு ஏதாவது வகையிலேனும் திரிபுபடுத்தல் செய்யாதிருத்தல் வேண்டும்.

12. இரவல் பெற்றுச் செல்வதற்கு எதிர்பார்க்கும் நூலொன்றில் ஏற்பட்டுள்ள சேதம் அல்லது திரிபுசெய்யப்பட்டமை தொடர்பாக நூலகரிடம் அறியத்தருதலை எவரேனும் அங்கத்தவர் ஒருவரால் புறக்கணிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் அந்நூலானது சேதம் அல்லது திரிபுபடுத்தலின்றிக் குறிப்பிட்ட அங்கத்தவருக்கு விநியோகிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

13. அங்கத்தவரினால் மீள ஒப்படைக்கப்பட்ட நூலொன்று மீண்டும் விநியோகிப்பதற்குப் பொருத்தமற்ற வகையில் சேதமாக்கப்பட்டோ திரிபு செய்யப்பட்டோ உள்ளதாக நூலகர் காணும் சந்தர்ப்பத்தில் அந்நூலை மீண்டும் பெற்றுக்கொள்ளும் செலவினை அங்கத்தவர் ஏற்றுக்கொள்ள வேண்டியவராகிறார். அந்நூலை மீண்டும் பெற்றுக்கொண்டதன் பின்னர் "பழுதடைந்த நூலென விற்பனை செய்யப்பட்டது" என முத்திரை பொறிக்கப்பட்டு அந்நூல் அங்கத்தவருக்கு வழங்கப்படல் வேண்டும்:-

14. நூலகத்திலிருந்து பெறப்பட்ட நூலொன்று எந்தவொரு அங்கத்தவராலும் வேறொருவருக்குக் கொடுக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(i) மேலே துணைவிதியின் 13 ஆவது பிரிவிற் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறும் எந்தவொரு அங்கத்தவரினதும் அங்கத்துவம் நீக்கப்படும்;

(ii) தொற்றுநோய் ஒன்றினால் பாதிக்கப்பட்ட எவரேனும் ஒரு நபரினால் நூல் பயன்படுத்தப்பட்டுள்ளதெனத் தான் அறிந்துகொண்ட வகையில் எந்தவொரு அங்கத்தவராயினும் எந்தவொரு நூலையும் நூலகத்துக்குத் திருப்பி ஒப்படையாதிருத்தல் வேண்டும்.

(iii) இரவல் பெற்றுச்செல்லப்பட்ட நூலொன்று தொற்றுநோய் ஒன்றினால் பீடிக்கப்பட்ட எவரேனும் ஒரு நபரினால் பயன்படுத்தப்பட்டிருப்பின் அந்நூலானது அழிக்கப்படவேண்டியதோடு அந்நூலினை மீண்டும் பெறுவதற்குரிய செலவுத் தொகையானது அங்கத்தவர் மூலம் நூலகரிடம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(iv) இரவல் பெற்றுச்செல்லும் அங்கத்தவரொருவருக்கு வழங்கப்படும் அங்கத்துவ அட்டையானது அங்கத்தவர்மூலம் தொலைந்துபோக நேரிடுமிடத்து அங்கத்தவர் அவ்விடயம் தொடர்பாக நூலகருக்கு எழுத்துமூலம் அறியத்தருதல் வேண்டும். அங்கத்தவர் நூலகத்திலிருந்து நூலொன்றினையும் பெற்றுச்செல்லவில்லை என நூலகர் கருதுமிடத்து அவ்வங்கத்தவருக்கு நகல் அங்கத்துவ அட்டை வழங்கப்படலாம்.

(v) அங்கத்துவ அட்டை தொலைந்து போனமை தொடர்பாக அறிவிக்கப்பட்டு 14 நாட்கள் கடந்தபின்னரேயன்றி அவ்வங்கத்தவருக்கு நகல் அங்கத்துவ அட்டை வழங்கப்படலாகாது.

15. ஏதாவது ஒரு நூலினை எந்த அங்கத்தவருக்குப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும் என்பது தொடர்பாக இரண்டு அங்கத்தவர்களுக்கிடையே அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்பட்டால் அத்தகைய முரண்பாடுகள் நூலகரினால் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும்.

16. இரவல் கொடுக்கப்படும் நூலொன்று எவரேனும் அங்கத்தவரொருவரால் கேட்கப்படுமிடத்து அதனை அவருக்கு வழங்குதல் வேண்டும்.

17. மேற்படி நூலானது ஏற்கனவே விநியோகிக்கப்பட்டிருப்பின் கேட்டவரின் அல்லது கேட்டவர்களின் பெயர்கள் எதிர்பார்ப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டு அந்நூல் நூலகத்துக்குக் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அந்நபர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நூலகர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

*18.* நூல்களை இரவல் பெற்றுக்கொடுக்கும் நூலகமானது ஞாயிற்றுக்கிழமை தினம், அரசாங்க விடுமுறை தினம் மற்றும் ஆகக்குறைந்தது 7 நாட்களுக்குமுன் அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டதன் பின் தொகை மதிப்பீடு செய்வதற்காக குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய ஏதாவதொரு தினம் தவிர்ந்த ஏனைய நாட்களில் தினந்தோறும் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரை திறந்து வைக்கப்படும். எனினும் செயற்குழுவினரின் சிபாரிசுகளுக்கமைய திறந்துவைக்கப்படும் நாட்களிலும் நேரங்களிலும் மாற்றங்கள் செய்யப்படலாம்.

*19.* **ஆய்வுப் பிரிவு** :-

(i) நூலகரின் அனுமதியுடன் ஆய்வுப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் கையொப்பமிட்டு ஆய்வு நூல்களை ஆய்வுசெய்தல் வேண்டும்;

(ii) வாசிப்பதற்காகத் தன்னிடம் வழங்கப்பட்டுள்ள எந்தவொரு நூலையோ சஞ்சிகையையோ அல்லது வேறு எந்தப் பொருளையோ ஆய்வுப் பிரிவிற்கு வெளியே கொண்டுசெல்லாதிருத்தல் வேண்டும். எனினும் நிழற்படப் பிரதிச் சேவைப் பிரிவொன்று இயங்குவதாயிருப்பின் நூலகரின் அனுமதியுடனும் அவரது பொறுப்பின்கீழும் தொடர்புடைய ஆவணத்தின் தேவையான பக்கங்களைக் குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்தி நிழற்படப் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு கோரும் எவருக்கும் வாய்ப்பளிக்கப்படல் வேண்டும்.

(iii) ஆலோசனைச் செயற்குழுவின் சிபாரிசுகளுக்கேற்ப சபையினால் முன்மொழியப்படும் பிரேரணைகளுக்கமைவாகத் தீர்மானிக்கப்படும் தொகை மேற்படி நிழற்படப் பிரதிச் சேவைக்கென அறவிடப்படும்.

(iv) தினந்தோறும் மு. ப. 8.30 மணிமுதல் பி. ப. 4.00 மணிவரை திறந்து வைக்கப்பட்டிருப்பதோடு அவ்வப்போது செயற்குழுவின் சிபாரிசுகளுக்கமைய மகா சபையினால் தீர்மானிக்கப்படும் நாட்களிலும் நேரங்களிலும் ஆய்வுப் பிரிவு வாசகர்களுக்கெனத் திறந்து வைக்கப்படும்.

*20.* **வாசிகசாலை** :-

(i) திறந்து வைக்கப்பட்டிருக்கும் எல்லா நாட்களிலும் நூலக வாசிகசாலை மு. ப. 8.30 மணிமுதல் பி. ப. 4.30 மணிவரை அல்லது செயற்குழுவின் சிபாரிசுகளுக்கமைய மகா சபையினால் தீர்மானிக்கப்படும் நாட்களிலும் நேரங்களிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கும். வாசிகசாலை எவராலும் பயன்படுத்தப்படக்கூடியது. அதன்பொருட்டு வாசிகசாலையில் வைக்கப்பட்டிருக்கும் பதிவேட்டில் பெயரையும் வந்த நேரத்தையும் குறித்து கையொப்பத்தினையிட்டு வாசிகசாலையின் பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

(ii) வாசிகசாலையில் வைக்கப்பட்டுள்ள அல்லது வாசிகசாலைக்குச் சொந்தமான ஏதாவதொரு செய்தித்தாளுக்கோ வாராந்த சஞ்சிகைக்கோ வரைபடத்துக்கோ அல்லது வாசிகசாலைக்குரிய வேறு பொருளுக்கோ சேதம் விளைவிக்காதிருத்தல் வேண்டும்.

*21.* **நிழற்படப் பிரதிகள் சேவை** :-

(i) நிழற்படப் பிரதிகள் சேவை நடைமுறைப்படுத்தப்படின் நூலகரின் அனுமதியோடும் அவரின் பொறுப்பின்கீழும் தொடர்புடைய ஆவணத்தின் தேவையான பக்கங்களை குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திப் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு கோரும் எவருக்கும் வாய்ப்பளிக்கப்படல் வேண்டும்;

(ii) நிழற்படப் பிரதிகளின் கட்டணமாக தனிப்பக்கப் பிரதியொன்றுக்கென 3 ரூபாவும் இருபக்கப் பிரதியொன்றுக்கென 5 ரூபாவும் அறவிடப்பட வேண்டும். எனினும் ஆலோசனைச் செயற்குழுவின் சிபாரிசுகளுக்கேற்ப அவ்வப்போது சபையினால் முன்மொழியப்படும் பிரேரணைகளின் மூலமாக கட்டணத்தொகையினை மீளாய்வு செய்யும் தகைமை சபைக்குரியதாகும்.

*22* **கட்புல செவிப்புல, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு**:-

(அ) **இணைய வசதிகள்**:

(i) நூலகத்தின் மூலமாகப் பெறப்படும் மேற்படி இடைக்கால விதிகளில் அட்டவணை இல. 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் மாதிரிப் படிவத்தினைப் பூர்த்திசெய்து ஒருவருக்கு ஒரு மணி நேர இணைய சேவையினை ஒதுக்கிக்கொள்ள முடியும்.

(ii) இணைய வசதியின் பொருட்டு கட்டணமாக ஒரு மணித்தியாலத்துக்கு 20 ரூபா அறவிட்டுக்கொள்ளலாம். எனினும் ஆலோசனைச் செயற்குழுவின் சிபாரிசுகளுக்கேற்ப அவ்வப்போது சபையினால் முன்மொழியப்படும் பிரேரணைகளின் மூலமாக கட்டணத் தொகையினை மீளாய்வு செய்யும் தகைமை சபைக்குரியதாகும்.

(iii) தினமும் மு. ப. 8.30 முதல் பி. ப. 4 மணி வரை இணைய வசதி பெற்றுத்தரப்படும். எனினும் அவ்வப்போது செயற்குழுவின் சிபாரிசுகளுக்கமைய மகா சபையினால் தீர்மானிக்கப்படும் நாட்களிலும் நேரங்களிலும் வாசகர்களுக்கு இணைய வசதி வழங்கப்படும்.

(ஆ) **இலத்திரனியல் நூலக சேவை:**

(i) இரவல் பெறும் நூலகத்தின் அங்கத்தவர் ஒருவருக்கு வழங்கப்படும் அங்கத்துவ அட்டைகள் இரண்டில் ஒரு அட்டைக்கென ஒரு தடவையில் நூலொன்றினோடு இறுவட்டு ஒன்றினையும் பெற்றுக்கொள்ள முடியும். அங்கத்தவரினால் பெற்றுக்கொள்ளப்படும் இறுவட்டின் பொருட்டு மீளப் பெற்றுக்கொள்ளக்கூடிய 100 ரூபா இற்கான கட்டணம் நூலகத்தில் வைப்புச்செய்யப்பட வேண்டும்.

(ii) எவரேனும் அங்கத்தவரொருவரால் இரவல் பெற்றுச் செல்லப்பட்ட இறுவட்டானது ஊறுசெய்யப்பட்டுள்ளதெனக் கருதப்படுமிடத்து வைப்புச் செய்யப்பட்ட அத்தொகையானது இழப்பீட்டுப் பணமாகப் பெற்றுக்கொள்ளப்படும்.

23. **எவரேனும் ஒருவர்:**

(i) தெரணியகல பொதுநூலகத்துக்குள் அல்லது அதைச் சூழவுள்ள இடங்களில் ஒழுக்கமற்ற விதத்தில் அல்லது ஏனையோருக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் விதத்தில் நடந்துகொள்ளாது இருத்தல் வேண்டும்;

(ii) நூலகத்துக்கு அல்லது அதற்குச் சூழவுள்ள பிரதேச சபையின் ஏதாவதொரு கட்டிடத்துக்கு அல்லது கட்டிடத்தின் ஒரு பகுதிக்கு அல்லது ஏதாவதொரு சொத்துக்கு கேடுகளை விளைவிக்கவோ அல்லது திரிபுபடுத்தவோ கூடாது;

(iii) நூலகம் திறந்து வைக்கப்பட்டிருக்கும் நேரத்துக்குப் பின்னர் மேற்படி நூலகச் சுற்றுப்புறத்தில் தங்கிநிற்றல் அல்லது காரணம் எதுவுமின்றி நடமாடுதல் தகாததாகும்;

(iv) நூலகத்தில் மது அருந்துதல் புகைத்தல் அல்லது துப்புதல் என்பன செய்யத்தகாது;

(v) நூலகத்தில் தாயக்கட்டை, சீட்டுக்கூட்டம் என்பனவற்றின்மூலம் சூது விளையாடுதல் கூடாது;

(vi) நூலக சுற்றுப்புறத்தில் சத்தமிடுதல், பாட்டுப்பாடுதல் அல்லது வேறும் ஒலிகளை எழுப்புதல் மூலம் நூலகத்தைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தாதிருத்தல் வேண்டும்;

(vii) தூய்மையற்ற வகையில் நூலகத்துக்குள் பிரவேசிக்காதிருத்தல் வேண்டும்;

(viii) நூலக சுற்றுப்புறத்துக்குள் எந்தவொரு விலங்கையும் கொண்டுசெல்லாதிருத்தல் வேண்டும்;

(ix) நூலக சுற்றுப்புறத்துக்குள் தூங்குதல் அல்லது ஏதாவது உணவு வகைகளை உண்ணுதல் கூடாது;

(x) மேற்படி இடைக்கால விதிகளின்கீழ் முறையாகச் செயற்படும்போது நூலகருக்கு அல்லது நூலகரின் உத்தரவின்படி செயற்படுகின்ற வேறொருவருக்கு இடையூறாகச் செயற்படாதிருத்தல் வேண்டும்;

(xi) ஏதாயினுமொரு தொற்று அல்லது சரும நோயினால் பீடிக்கப்படுகின்ற அல்லது அண்மைக்காலத்தில் பீடிக்கப்பட்ட அல்லது தற்போது பீடிக்கப்பட்டுள்ள ஒருவரைப் பராமரிப்பவரொருவர் அத்தகைய நோய்பரவும் காலஎல்லை முடிவுறும் வரையில் பொது நூலகத்துக்குள் நுழையாதிருத்தல் வேண்டும்.

24. இரவல் பெறும் பிரிவைத் தவிர ஆய்வுப் பிரிவையும் ஏனைய பிரிவுகளையும் பயன்படுத்துவதற்காகச் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள மேற்படி துணைவிதியின் 2 ஆவது உபபிரிவின் பிரகாரம் கட்டணமொன்று நூலகத்தின் அங்கத்தவர்கள் அல்லாதவர்களிடமிருந்து அறவிடப்படலாம். இக்கட்டணத்தொகையானது செயற்குழுவின் சிபாரிசுகளுக்கேற்ப சபையினால் அவ்வப்போது முன்மொழியப்படும் பிரேரணைகளுக்கமைய மீளாய்வு செய்யப்படலாம்.

25. **வருடாந்த தொகை மதிப்பீடு:**

(i) நூலகம் தொடர்பாக ஒவ்வொரு வருடமும் தொகை மதிப்பீடொன்றைச் செய்வது செயலாளரின் பொறுப்பாகும்;

(ii) வருடாந்த தொகை மதிப்பீட்டு அறிக்கையைச் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்;

(iii) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சிபாரிசுகள் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் செயற்படுத்தப்படல் வேண்டும்.

26. மேற்படி துணைவிதியின் யாதேனும் பிரிவொன்றினை மீறுதல் குற்றமாவதோடு எவராவது ஒருவர் தகுந்த அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றினால் குற்றமொன்றுக்காகக் குற்றவாளியாக்கப்பட்டு 1985 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) ஆவது பிரிவின்படி வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் தண்டம் பெற்றதன் பின்னர் தொடர்ந்தும் அக்குற்றத்தினை செய்துவருவாரேயாயின் அம்மீறுகைமீது அவதானம் செலுத்தி தவிசாளரால் அல்லது செயலாளரினால் அல்லது அதிகாரம் பெற்ற ஏனையவொரு உத்தியோகத்தரால் எழுத்துமூலமான அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்பும் மென்மேலும் அக்குற்றம் செய்யப்படும் ஒவ்வொரு தினத்துக்காகவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122(2) ஆவது பிரிவின்படி விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டத்துக்கு உள்ளாக்கப்படலாம்.

27. **பொருள்கோடல்:**

(i) 'நூலகர்' என்ற சொல் நூலகத்துக்குப் பொறுப்பாக இருப்பதற்காகப் பிரதேச சபையினால் நியமனம் செய்யப்படுபவர் எனப் பொருள்படுவதோடு அவருக்குரிய உதவியாளரும் இதற்குள் அடங்குவர்;

(ii) 'சமூக அபிவிருத்தி அலுவலர்கள்' எனப்படுபவர்கள் உள்ளூராட்சி ஆணையாளரினால் பிரதேச சபையின் சனசமூக சேவைகளை அபிவிருத்தி செய்வதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள வட்டார அலுவலர்களைக் குறிக்கும்;

(iii) 'சபை' எனப்படுவது தெரணியகல பிரதேச சபையைக் குறிக்கும்;

(iv) 'செயற்குழு' எனப்படுவது நூலக ஆலோசனை செயற்குழுவினரை குறிக்கும்;

(v) 'பிரமுகர்கள்' எனப்படுவது தெரணியகல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வாழும் புகழ்பெற்ற நன்மதிப்புடைய, சமூகப்பணிகளில் ஈடுபட்டுள்ள புத்திஜீவிகளைக் குறிக்கும்.

***அட்டவணை - 1***

**அங்கத்தவர் இணைய வசதியை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**
**பொது நூலகம் - தெரணியகல பிரதேச சபை**

| | |
|---|---|
| அங்கத்தவர் பெயர் | |
| முகவரி | |
| தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | |
| அங்கத்தவர் பெரியோர், சிறியவர் | |
| தினம் | |
| நேரம் ............. இருந்து .............. வரை | |
| தொகை<br>(மணித்தியாலயத்திற்கு 20 ரூபா) | 1 மணித்தியாலயம்<br>2 மணித்தியாலயம்<br>3 மணித்தியாலயம்<br>4 மணித்தியாலயம் |
| கையொப்பம் | |

-----,
நூலக அதிகாரி.

***அட்டவணை - 2***

**அங்கத்தவர் அல்லாதவர் இணையம் மற்றும் மின் வாசிகசாலை வசதியை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**
**பொது நூலகம் - தெரணியகல பிரதேச சபை**

| | |
|---|---|
| பெயர் | |
| முகவரி | |
| தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | |
| தொழில் | |
| தினம் | |
| நேரம் ............. இருந்து .............. வரை | |
| தொகை<br>(மணித்தியாலயத்திற்கு 50 ரூபா) | 1 மணித்தியாலயம்<br>2 மணித்தியாலயம்<br>3 மணித்தியாலயம்<br>4 மணித்தியாலயம் |
| கையொப்பம் | |

-----,
நூலக அதிகாரி.

10-328

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

ஊவா மாகாண அரசாங்க சேவை முகாமைத்துவ உதவியாளர் - தரம் III பதவிக்கு
ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2015

ஊவா மாகாண அரசாங்க சேவை முகாமைத்துவ உதவியாளர் - தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்தபோட்டிப்பரீட்சைக்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2015.10.31 ஆகும்.

| | | |
|---|---|---|
| ஆட்சேர்க்கப்படும் தரம் | :- | முகாமைத்துவ உதவியாளர் - தரம் III |
| சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) | :- | பொது நிர்வாக சுற்றறிக்கை இல 06/2006 (iv) இன் MN 2 |
| | - | 2006A சம்பளகுறியீட்டுக்கு அமைய ரூ. 13,990 - 10×145 - 11×170 - 6×240 |
| - | | 14 × 320 - 23,230/- ஆகும். |

**2. ஆட்சேர்ப்பதற்குரிய பொதுத் தகைமைகள் :-**

(அ) விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவியின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். சிறந்த நடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று ஊவா மாகாணத்தில் உடன் முந்திய 3 வருட நிரந்த வதிவை உடையவர்களாக இருத்தல் வேண்டும். அத்தோடு கிராம அலுவலரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட உரிய படிவத்தில் வதிவு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) சேவைக்கு ஆட்சேர்க்கப்படுவது பிரதிநிதித்துவ அடிப்படையில் ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மாவட்டமொன்றில் நிலவும் வெற்றிடத்திற்கு போட்டியிடுவதாயின் பின்வரும் விடயங்களில் ஒன்றையேனும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(i) விண்ணப்பதாரர் அந்த மாவட்டத்தில் பிறந்தவராக இருத்தல்

அவ்வாறு இல்லையெனின் -

(ii) பரீட்சைக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிக்கு உடன் முந்திய ஐந்து (5) வருட காலப்பகுதிக்குள் அவர் அந்த மாவட்டத்தில் ஆகக் குறைந்தது மூன்று (3) வருடங்களாவது தொடர்ச்சியாக நிரந்தர வதிவுள்ளவராக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லையெனின்,

(iii) அவர் தொடர்ச்சியாக ஐந்து (5) வருடங்கள் அந்த மாவட்டத்தில் தனது இடைநிலை பாடசாலைக் கல்வியை தொடர்ந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**: எவரேனுமொரு விண்ணப்பதாரியின் தாய் அல்லது தந்தை அரசாங்க, மாகாண அரச அல்லது அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில் இடமாற்றம் செய்யப்படக்கூடிய அரச சேவையை வகிப்பார்களாயின் அத்தகைய விண்ணப்பதாரருக்கு தனது தாய் அல்லது தந்தை பிறந்த இடம் அமைந்துள்ள மாவட்டத்தை தனக்குரிய மாவட்டமாக தெரிவு செய்வதற்கான அனுமதி வழங்கப்படும்.

(உ) இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமென இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று எல்லா விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(ஊ) **வயது**: விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**3.கல்வித் தகைமைகள்.-**

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலமொழி மற்றும் கணிதம் அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறுபாடங்களில் (6) சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(ஆ) கல்விப்பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். பழைய பாடத்திட்டத்தின் கீழ் 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

**4. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :-**

(அ) இப்பதவி நிரந்தமானதும். ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

(ஆ) நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் ஊவா மாகாணத்தின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

(இ) அரசகருமமொழி அல்லாத ஒரு மொழி மூலம் சேவையில் இணைந்திருந்தால் சேவை நிரந்தமாக்கப்பட முன்னர் ஒரு அரசகரும மொழியில் சித்தியெய்துதல் வேண்டும்.

(ஈ) ஊவா மாகாண அரசாங்க சேவை முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் பொது நிர்வாக சுற்றறிக்கை 07/2007 மற்றும் அதற்கு இடை நேர்விளைவான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கும் அமைய ஏற்புடைய மட்டத்தில் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5. **ஆட்சேர்க்கும் முறை.-** நிலவும் வெற்றிடங்களில் 70% திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் வெளிவாரி விண்ணப்பதாரர்கள் மூலம் பூர்த்திசெய்யப்படும். திறந்த போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை ஒழுங்கில் சான்றிதழ்களைப் பரீட்சிப்பதற்கு நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

சேவைக்கான ஆட்சேர்ப்பு பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படும். ஊவா மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப ஒவ்வொரு மாவட்டத்திற்குமான வெற்றிடங்களின் எண்ணிக்கையில் உரிய தொகை ஒதுக்கீடு செய்யப்படும். ஏதேனும் ஒரு மாவட்டத்தில் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்காக போட்டியிடுவதற்கு அம்மாவட்டத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தகுதி பெற்றவர்களாவர்.

ஒரு மாவட்டத்திற்காக மேலே கூறப்பட்டவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களை அந்த மாவட்டத்திற்காக விண்ணப்பித்த தகைமை பெற்ற விண்ணப்பதாரர்கள் மூலம் நிரப்ப முடியாத விடத்து, அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை, அடுத்துள்ள மாவட்டத்துக்கு அந்த மாவட்டத்தின் சனத்தொகை விகிதாசாரத்திற்கு அமைய மீள்பகிர்வு செய்யப்படும்.

நிரப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாக இருப்பதன் காரணத்தினால் மாவட்டத்தின் சனத்தொகையை அடிப்படையாகக் கொள்ள முடியாதவிடத்து திறமை ஒழுங்கின் அடிப்படையில் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

பரீட்சையில் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கையானது, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட குறைவாகக் காணப்படுமிடத்து மாவட்டத்தின் சனத்தொகை அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

6. **விண்ணப்பிக்கும் முறை.-** இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ4 அளவிலான தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். இல 1 தொடக்கம் 4 வரையிலான பகுதியை முதல் பக்கத்திலும் 5 தொடக்கம் 9 வரையிலான தகவல்களை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சிய விடயங்களை மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு தாங்கள் விண்ணப்பப்படிவங்களை தயார்செய்துகொள்ளல் வேண்டும். அந்தந்த தலைப்புக்களை பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைய தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழியிலேயே விண்ணப்பத்தை பூரணப்படுத்தல் வேண்டும். தமிழ் மொழி மூலம் முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் தலைப்புக்கள் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் நிரப்பப்படல் வேண்டும்.

- * தாங்கள் உள்ளடங்கும் மாவட்டம் ''பதுளை'' அல்லது''மொணராகலை'' என்பதை விண்ணப்பப்படிவத்தில் A எனும் கூட்டில்தெளிவாககுறிப்பிடவும்.
- * தாங்கள் பரீட்சைக்குத் தோற்றும் ஊடகமொழி மற்றும் அதற்கு ஏற்புடைய இலக்கம் என்பவற்றை விண்ணப்பப்படிவத்தில் B எனும் கூட்டில் குறிப்பிடவும்.
- * முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயரை ஆங்கில பெரிய எழுத்துக்களில் குறிப்பிடுதல் வேண்டும்.
- * உதா: PERERA A.B.C. (இங்கு Mr./Mrs./Miss ஆகிய சொற்களில் பொருத்தமற்றதை வெட்டி விடவும்)

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2015.10.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு ''செயலாளர்'' ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, இல 14/4, பீலிபொத்தகம வீதி, பிங்அராவை, பதுளை.' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பவும். விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''ஊவா மாகாண அரசாங்க சேவை முகாமைத்துவ உதவியாளர் - தரம் III பதவிக்குஆட்சேர்ப்பதற்கானதிறந்தபோட்டிப்பரீட்சை - 2015'' என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

7. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் /பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் ஒரு அதிகாரி/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் 230,700 ரூபா அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

8. **பரீட்சை மற்றும் நிர்வாக செலவுகள்**.- பரீட்சைக் கட்டணம் மற்றும் நிர்வாக செலவு 400 ரூபா ஆகும். இந்த தொகையை ஊவா மாகாண பிரதம செயலாளரின் வருமானத் தலைப்பு 20.03.02.13 க்கு வரவு வைத்து ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் முதல் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் கட்டாயமானதாகும். எதிர்கால தேவைக்கு பற்றுச் சீட்டின் பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது முக்கியமானதாகும். ஊவா மாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கு பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுக்கள் தவிர்ந்த வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்களோ அல்லது காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எத்தகைய காரணத்தைக்கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் கருதுகோளின் அடிப்படையில் உரிய முறைப்படி விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ்களைப் பரீட்சித்துப் பார்க்காமல் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் ஏற்புடைய பதவிக்கு தகுதிபெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.நேர்முகப் பரீட்சையின் போது தேவையான தகைமைகளை பூர்த்திசெய்யவில்லையென தென்படுமாயின் அந்த விண்ணப்பதாரி நியமனம் வழங்க தகுதியற்றவராக கருதப்படுவார்.

10. திறந்த போட்டிப் பரீட்சை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவினாலோ அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினாலோ நடாத்தப்படும். போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் மொத்த பரீட்சைக்கும் ஒரு மொழிமூலம் மாத்திரமே தோற்ற முடியும். விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் ஊடகமொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. பரீட்சை நடைபெறும் தினத்தன்று விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டையையோ அல்லது செல்லுபடியாகும் கடவுச் சீட்டையோ பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த ஆவணங்கள் தவிர்ந்த பிற எத்தகைய ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. **போட்டிப் பரீட்சையின் பாட விதானம்**:- இந்த போட்டிப் பரீட்சை 2 வினாப் பத்திரங்களைக் கொண்டுள்ளது.

பரீட்சார்த்தியின் பணிக்கடமைளுக்கான தகைமைகளையும் ஆற்றலையும் பரீட்சிக்கக் கூடிய வகையில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

| | வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | மொழியாற்றல் | 2 1/2 - மணித்தியாலம் | 100 | 40% |
| 2 | உளச்சார்பு | 1 மணித்தியாலம் | 100 | 40% |

**மொழியாற்றல்**.- இவ்வினாப்பத்திரம், பரீட்சார்த்தியின் கருத்துக்களை வெளியிடும், கிரகிக்கும், எழுத்துப் பிழையின்றி எழுதும், மொழியும் மற்றும் கட்டுரை எழுதும், கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றிற்கான பருமப்படியைத் தயாரிக்கும், கொடுக்கப்பட்ட தரவுகளுக்கு ஏற்ப வரைபுகளையும் அட்டவணைகளையும் தயாரிக்கும், கொடுக்கப்பட்ட பந்தியைச் சுருக்கி எழுதும், கொடுக்கப்பட்ட பலவாக்கியங்களின் கருத்துக்களை தனி வாக்கியத்தில் எழுதும், எளிய இலக்கணப் பயன்பாடு என்பன தொடர்பான அறிவினைப் பரீட்சிப்பதற்கான விடயம் சார்ந்த வினாக்களைக் கொண்டிருக்கும்.

**உளச்சார்பு**.- இவ்வினாப்பத்திரம் விண்ணப்பதாரரின் கணக்குத் திறன், தர்க்கரீதியில் சிந்திக்கும் ஆற்றல், பொதுவான நுண்ணறிவு என்பவற்றை அளவிடக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட விடயம் சார்ந்த வினாக்களைக் கொண்டிருக்கும்.

**குறிப்பு**.- ஒவ்வொரு வினாப்பத்திரம் தொடர்பிலும் தெளிவற்ற கையெழுத்துக்களுக்கும் சொற்களிலுள்ள எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். பரீட்சையில்

சித்தியெய்துவதற்கு பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது ஐம்பது (50%) வீதத்தையேனும் பெறுதல் வேண்டும். விண்ணப்பதாரர்களில்அதி கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்களின் முதன்மை ஒழுங்கு முறைக்கு ஏற்ப தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

13. **பிழையான தகவல்கள் வழங்குதல்.**- இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எவரேனுமொரு பரீட்சார்த்திக்கு தகைமை இல்லையென தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறுகின்ற போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலாயினும் அவரது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னராயினும் விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை என்றோ அல்லது அறிந்துகொண்டே பொய்யான தகவல்களை சமர்ப்பித்துள்ளார் என்றோ அல்லது சரியான தகவலொன்றை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என்றோ தெரியவருமாயின் அவரது சேவை முன் அறிவித்தல் ஏதுமின்றி முடிவுறுத்தப்படும்.

14. இந்தப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் / ஆட்சேர்ப்பு செய்யாதிருத்தல் அல்லது நிலவும் வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புதல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றியோ அல்லது இது பற்றிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது. அவ்வாறே இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக தெளிவுபடுத்தும் /தீர்மானிக்கும் உரிமை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது.

ஆர். எம். ரீ. பீ. ஹாதியல்தெனிய
செயலாளர்,
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு.

ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
பதுளை,
2015, செத்தெம்பர் .

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஊவா மாகாண அரசாங்க சேவை முகாமைத்துவ உதவியாளர் - தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015**

Open Competitive Examination for Recruitment to the Post of Uva Provincial Council Public Service Management Assistant Service - Grade III - 2015

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

A. தாங்கள் உள்ளடங்குகின்ற மாவட்டம்
(பதுளை - 01/மொணராகலை - 02)

B. பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்
(சிங்களம் - 01/தமிழ் - 02/ஆங்கிலம் - 03)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr/Mrs/Miss :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

1.2 முழுப்பெயர் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

1.3 முழுப்பெயர் :-----.
(சிங்களத்தில் /தமிழில்)

2. 2.1 நிரந்தர முகவரி :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

2.2 நிரந்தர முகவரி :-----.
(சிங்களத்தில் /தமிழில்) :-----.

2.3 தொலைபேசி இலக்கம் :-----.

3. 3.1 பால் : பெண் - 1/ஆண் - 0 ☐

3.2 பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 2015.10.31 ஆம் திகதியன்று வயது :
வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

3.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

4. 4.1 2015.10.31 ஆந் திகதிக்கு ஊவா மாகாணத்தில் நிரந்தமாக வசிக்கும் காலப்பகுதி:
வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4.2 மாவட்டத்தில் எப்போதிருந்து வசிக்கின்றீர்கள்:-----.
4.3 வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு :-----.
4.4 வசிக்கும் கிராம அலுவலர் பிரிவு :-----.

5. கல்வித் தகைமைகள் :-
5.1 க.பொ.த. (சாதா/தரம்) பரீட்சை:-----.
1. ஆண்டு :-----. 2. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6. | | |
| 2 | | | 7. | | |
| 3 | | | 8. | | |
| 4 | | | 9. | | |
| 5 | | | 10. | | |

5.2 க.பொ.த (உயர் /தரம்) பரீட்சை
1. ஆண்டு :-----. 2. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

6. வேறு தகைமைகள் :-----.

7. தாங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றமொன்றுக்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ஆம் /இல்லை
ஆம் எனில் விபரத்தை குறிப்பிடுக :-----.

8. விண்ணப்பதாரர் தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தொழில் புரிபவராயின் தொழில் புரியும் திணைக்களத்தின் பெயர் மற்றும் முகவரி :-----.

9. பரீட்சைக் கட்டணம் செலுத்திய விபரங்கள்: -
9.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் :-----.
9.2 பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
9.3 செலுத்திய தொகை :-----.

| பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடியது.) |
|---|

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(i) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யப்படாமையினாலும் மற்றும் அல்லது சரியாகப் பூர்த்திசெய்யாமையினாலும் மற்றும் அல்லது பிழையாகப் பூர்த்திசெய்திருப்பதனாலும் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகிறேன்.மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) என்னால் இங்கு தரப்பட்ட தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ...................................................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ............................. ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

12. **திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் சான்றிதழ்: -**

(தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் ஏற்புடையது)

திரு./திருமதி/செல்வி ........................................................................................... இவ் அமைச்சில் /திணைக்களத்தில் / நிறுவனத்தில் சேவையாற்றுகிறார் எனவும், ........................... ஆந் திகதி முதல் ............................. ஆந் தகதி வரை ............................ பதவியில் பணியாற்றி வருகிறார் எனவும், அவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும், அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்படவில்லை என்றும், இந்தப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / விடுவிக்க முடியாது என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)

திணைக்களத் தலைவரின் முழுப் பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

10-358

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.